KALAM -International Research Journal
Faculty of Arts and Culture
South Eastern University of Sri Lanka
Volume X Issue 1, 2016

# அபரக்கிரியையில் புலங்குப் பொருட்களும் அவற்றின் சமய முக்கியத்துவமும் பயன்களும்

**அ.கலைச்செல்வி**
மொழியியல் துறை
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்
இலங்கை

**ஆய்வுச்சுருக்கம்**

இம்மை மறுமை வாழ்வியலுடன் தொடர்புபட்ட கிரியையாக அபரக்கிரியை விளங்குகிறது. மறுமை வாழ்வியலைப் பொறுத்து பிதிர் உலகத்துடன் தொடர்புபட்ட கிரியை என்னும் வகையில் முக்கியத்துவம் பெறுகின்றது. எந்த கிரியையாக இருந்தாலும் அதற்குப் பயன்படுத்த வேண்டிய சில விஷேட பொருட்கள் காணப்படுகின்றன. அவை அவ்வவ் கிரியைகளின் சிறப்பு அடையாளங்களாகப் பயன்படுத்தப்படுகின்றன. அதுமற்றுமன்றி அவை ஒவ்வொன்றும் அறிவியல் ரீதியாகவோ, உளவியல் ரீதியாகவோ அல்லது ஆன்மீக ரீதியாகவோ பயன்பாட்டு முக்கியத்துவம் வாய்ந்ததாகவும், வாழ்வியல் தத்துவங்களை உணர்தக்கூடிதாகவும் காணப்படுகின்றது. அந்தவகையில்அபரக்கிரியையின் போது பயன்படுத்தப்படும் விஷேடப் பொருட்களின் சமய முக்கியத்துவத்தினையும் பயன்பாடுகளையும் எடுத்துக்காட்டுவதே இவ்வாய்வின் நோக்கங்கள் ஆகும். அபரக்கிரியையின் போது பயன்படுத்துகின்ற விஷேட பொருட்களை மக்கள் எவ்விதமான கேள்விகளுக்கும் உட்படுத்தாமல் ஆற்றல் பொதிந்தது என ஏற்றுக்கொள்கின்றமை ஆய்வுப்பிரச்சினையாக உள்ளது. இவ்வாய்வில் முதலாம் நிலைத்தரவுகளாக அபரக்கிரியை சார்ந்த மூலநூலும் துணைத்தரவுகளாக நேர்காணல், நேரடி அவதானிப்புகள், அபரக்கிரியை சார்ந்த சஞ்சிகைகள், ஆய்வு கட்டுரைகள் போன்றனவும் அமைகின்றன. அபரக்கிரியைகள் பரம்பரையாக மேற்கொள்ளப்பட்ட முறைகளின் அடிப்படையிலும் நம்பிக்கையின் படியும் நடத்திவருகின்றமை அவதானிக்கலாம். இவ்வகையில் நடத்தப்பட்டுவரும் அக்கிரியைகளுக்கு பயன்படுத்துகின்ற பொருட்களும் வெறுமனே கிரியைகளுக்காக மட்டுமன்றி தனித்த அர்த்தமுடையதாக கருதப்படுகின்றன என்பதை எடுத்துக்காட்டுவதோடு இவற்றினூடாக இக்கிரியைகளும் சமூக தத்துவார்த்தங்களையும் தாற்பரியங்களையும் கொண்டவகையிலேயே நடாத்தப்படுகின்றமையையும் முடிவாக எடுத்துரைக்கின்றது.

**திறவுச் சொற்கள்:** அபரக்கிரியை, தத்துவம், பொருட்கள்.

## அறிமுகம்

மனிதனுக்கு உள்பொருள் பற்றிய அறிவை ஏற்படுத்துவதும் அவனை ஆன்மீக வாழ்வில் முழுமைப்பெற செய்வதும் சமயத்தின் தலையாய பணியாகும். மனிதனை மனிதனாக வாழவைக்கின்ற வழிகாட்டியாக விளங்குபவை சமயங்களும் அவைசார்ந்த சடங்குகளுமேயாகும். மனிதன் தன் வாழ்நாளில் முக்கியமான சடங்குகளை தனக்கும் தன் குடும்பத்திற்கும் சமூகத்திற்கும் நன்மை கருதி செய்கின்றான். மனிதனுடைய வாழ்க்கைச் சுழற்சியில் மேற்கொள்ளப்படும் சடங்குகளே வாழ்வியற் சடங்குகளாகும். நவீன அறிவியல் புகாத பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, இயற்கையைச் சார்ந்து வாழ்தலும், வளர்தலும் குறித்து நம் முன்னோர்கள் கொண்ட அணுகு முறைகளின் வெளிப்பாடாக சடங்குகள் அமைந்துள்ளன. இயற்கை மற்றும் சமூகச் சிக்கலை எதிர்க்கொள்ளும் முகமாகச் சடங்குகள் உருவாக்கப்பட்டன. இவை வாழ்தலின் போது நல்ல விளைவுகளை எதிர்நோக்கியே உருவாக்கப் பட்டிருக்கின்றன.

நம்பிக்கையின் அடிப்படையில் பிறந்த பல்வகைச் சடங்குகள் இயற்கைச் சீற்றத்திற்கும் மாற்றத்திற்கும் ஒரு பதிலடியாக ஏற்படுத்தப் பட்டவை என்றால் சாலப் பொருந்தும். மக்கள் இறைவனை வழிபடுவதைக் காட்டிலும் இச்சடங்குகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றார்கள். சடங்குகள் மக்களின் அன்றாட வாழ்க்கையில் முக்கியமான அம்சமாக அமைந்து விட்டது. நிலையற்ற இந்த உலகில் பிறக்கும் ஒவ்வொருவரும் 'இறப்பது நிச்சயம்' என்பது நம் எல்லோரும் அறிந்த விடயம். உலகில் பிறந்த எந்த உயிர்களும் இறப்பது உறுதி. ''எப்போதாயினும் கூற்றுவன் வருவான்'' ''இறப்பு'' என்பது உறங்குவதை ஒக்குமெனவும் ''பிறப்பு'' என்பது உறங்கி விழிப்பதைப் போன்றதெனவும் வள்ளுவர் கூறுகின்றார்.

''உறங்குவது போலும் சாக்காடு உறங்கி விழிப்பது
போலும் பிறப்பு''
(குறள்: 339)

இந்துக்களின் வாழ்வியற் கிரியைகளில் ஒருவர் இறந்த பிறகு செய்யப்படும் அபரக்கிரியை மரபுகள் இன்றியமையாததொன்றாக விளங்குகின்றது. எந்த கிரியையாக இருந்தாலும் அதற்குப் பயன்படுத்த வேண்டிய சில விஷேட பொருட்கள் காணப்படுகின்றன. அவை அவ்வவ் கிரியைகளின் சிறப்பு அடையாளங்களாகப் பயன்படுத்தப்படுகின்றன. அதுமற்றுமன்றி அவை ஒவ்வொன்றும் அறிவியல் ரீதியாகவோ, உளவியல் ரீதியாகவோ அல்லது ஆன்மீக ரீதியாகவோ பயன்பாட்டு முக்கியத்துவம் வாய்ந்ததாகவும், வாழ்வியல் தத்துவங்களை உணர்தக்கூடிதாகவும் காணப்படுகின்றது.

## கோதானம்

ஒருவர் இறக்கும் போது '' உருத்திராந்தி கோதானம்'' என்ற பெயராலும் இறப்பின் பின் ஒரு வருடத்தின் முடிவில் செய்யப்படும் சபிண்டீகரண சிராத்தத்தில் பிண்டங்கள் போட்டபின்பு ''வைதரன் கோதானம்'' என்ற பெயரிலும் கோதானம் அவசியம் செய்யப்பட வேண்டும். இயலாதவர்கள் அப்பெயர்களைச்சொல்லி இயன்றளவு தட்சணை கொடுக்க வேண்டும்.

ஒருவனது உயிர் போகும் வேளை முதன் முதல் அவன் பிதிர்த்தன்மை அடையும் வரை கோதானம் அவனுக்கு உதவுகிறது எனலாம். பசுவின் உடலில் சகல தேவர்களும் சகல உலகங்களும் அடங்கி இருக்கின்றன. எனவே ஒருவனது ஆத்மா எங்கு சென்றாலும் அப்பசுத்தானம் உதவும் என கோதானம் பற்றிய சுலோகம் சொல்கிறது. பசுவானது இந்து பண்பாட்டு மரபில் வழிபாட்டிற்குரிய முதன்மையான உயிராகும். ஆலயங்களிலும், வீடுகளிலும் ''கோவாசம்'' என்ற கிரியை பசுவை அவ்விடங்களில் கட்டுதல் மூலம் நிறைவேற்றப்படுகின்றது. எமது சமயத்தின் முதற் சின்னமான விபூதி, பசுவினுடைய சாணத்திலிருந்தே பெறப்படுகின்றது. பஞ்சகௌவியம் வேள்விக்குரிய நெய் என்பனவும் பசுவினிடம் இருந்தே பெறப்படுகின்றது. இந்து மக்களின் மூலதனம் என்ற வகையில் ''பசுவானது கொள்ளப்படக் கூடாதது (அகன்யா)'' என இருக்கு வேதத்தில் போற்றப்பட்டது.

ஆலயங்களில் கும்பாபிஷேகம் நிறைவேறிய பின்பு 'கபிலா பூஜா' என்ற நிகழ்வில் ''கோதர்னம்'' (பசு காட்டும் வைபவம்) நடைபெறும். அங்கு கூறப்படும் மந்திரம் பசுவின் பெருமையை விபரமாக எடுத்துக்கூறுகிறது. எனவே ஒருவனது ஆன்மீக வாழ்வின் முற்பகுதியிலும் அவனது இறப்பிற்குப் பின்பு ஆன்மீக ஈடேற்றத்திற்கும் பசு ஒரு பிரதான வழிபாட்டுச் சீவனாகும்.

## எள்ளு

தானங்களில் எள்ளும் கோதானம் போல் ஒரு பிரதானமான தானமாகும். எள்ளு விஷ்ணுவினுடைய தேகத்திலிருந்து வெளிப்பட்டது என்று கூறப்படுகிறது. சகல பாவங்களையும் நீக்கவல்லது. எள்ளானது இறந்தவர்களின் கிரியைகளில் மாத்திரமின்றி பூர்வக்கிரியையிலும் பயன் படுத்தப்படுகின்றது. 'காயத்திரி ஹோமம்' போன்ற சில ஹோமங்களில் எள்ளுக்கலந்த பாயாசம் ஹோமம் செய்யவேண்டும் என்ற விதியுண்டு.

ஆலயக்கிரியையில் அக்னி வழிபாட்டுக் கிரியையில் அக்னியின் ஒவ்வொரு அங்கத்தின் வளர்ச்சியின் பொருட்டும் எள்ளினால் மூன்று மூன்று ஆகுதி கொடுக்கப்பட வேண்டும் என ஆகமங்களில் சொல்லப்படுகின்றன.

நவக்கிரஹ வழிபாட்டில் ''சனீஸ்வரன்'' (சனி) எனும் கிரகத்திற்கு உரிய தானியமாக எள்ளுக் கூறப்படுகிறது. இக்கிரகத்திற்கு அதி தேவதையாக யமன் என்ற இறப்புத் தெய்வம் கூறப்படுகின்றது. சனீஸ்வரன் ஆயுள்காரன் என்று சொல்வதும் அவ்வாயுளுக்குப் பொறுப்பான யமன் அதிதேவதையாக இருப்பதும் எள்ளானது இங்கு பயன் படுத்தப்படுவதும் பொருத்தமாக உள்ளது. ஒருவன் உயிர்போன பின்பு யமனே அவ்வுயிர்க்கு முதலாவது பொறுப்பாளி ஆவார். எனவே யமபாதைக்கு துன்பமில்லாமல் இருப்பதற்கும் பிதிர்களின் விருப்பத்திற்கும் இறந்தோர் வழிபாட்டில் எள்ளு உபயோகிக்கப்படுகின்றது. எள்ளு இருவகை எனக் கருடபுராணம் கூறுகின்றது. ஒன்று கறுப்பு மற்றது வெள்ளை. சிராத்த காலத்தில் கறுப்பு எள்ளே உபயோகிக்க வேண்டும் என விதிக்கப்பட்டுள்ளது. சிராத்தக் காலங்களில் கிருசரம் (க்ருசாரம்) என்ற ஒருவகைத் தானம் கூறப்பட்டுள்ளது. இது எள்ளும் சர்க்கரையும் சேர்ந்ததாகும். சிராத்தத்திற்கு வருவிக்கப்படும் குருவானவர் அன்றைய தினமும் முதல் நாள் இரவும் உணவு உண்ணக்கூடாது. இது சிராத்த நியமமாகும். சிராத்த கர்த்தாவிற்கும் இதுவே நியமமாகும். ஆனால் சிராத்த கர்த்தா முதல்நாள் உண்ணாமல் இருப்பது சாத்தியமாகும். ஆனால் நிமந்திரணத்திற்கு வரும் போக்தா அவ்வாறு இருப்பது சிரமமாகிவிடுகிறது. இதனால் பலர் சிராத்த நிமந்திரணத்திற்குப் போவதில்லை.

இவ்வாறு அழைக்கப்படும் குருமார்களுக்கு முதலில் கொடுக்கப்படுவதே கிருசரம் ஆகும். அதாவது அவர்கள் எமக்காக முதல்நாள் உணவு உண்ணாமல் உடலை வருத்திய தோஷம் நீங்க இது கொடுக்கப்படுகிறது. அப்படி அவர்கள் உணவு உண்டிருந்தாலும் அந்தந்த தோஷத்தையும் இந்தச் கிருசரதானம் நீக்கிவிடுகிறது.

இதே நடைமுறையில் சைவர்கள் மத்தியில் சிராத்தக் காலங்களில் குருமார்களுக்குத் தானம் வழங்குவதற்குமுன்பு வாழையிலையில் ''பாத்திராதிகாரம்'' என்ற பெயரில் எள்ளும் சர்க்கரையும் முதலில் வைக்கப்படுகின்றது. வந்திருக்கும் குருவானவர் (பாத்திரர்) தானத்தை ஏற்கக் கூடிய தகுதிக்கு உரியவர் (அதிகாரம்) என்ற கருத்தைப் பிரதிபலிக்கின்றது. விஷ்ணு தர்மோத்திரம் என்ற நூலில் ''கிரசரௌதனம்'' என்பது எள்கலந்த அரிசி என்ற குறிப்புக் காணப்படுகிறது.

எள்ளுத்தானம் செய்பவனுக்கு விரும்பியவாறு மகப்பேறு கிடைக்கும் என 'மனுஸ்மிருதி' கூறுகிறது. கல்விக் கேள்விகளிற் சிறந்த மக்களைப்பெற எள்ளுடன் கலந்த சோற்றை உண்ண வேண்டுமென்று பிருகதாரண்ய உபநிடதம் கூறுகிறது. எனவே எள்ளானது உடல்நலத்திற்கும் சகல பாவங்களையும் நீக்கும் பொருளாகவும் பிதிரர்க்கு திருப்தியளிக்கும் பொருளாகவும் பயன்படுத்தப்படுகின்றது.

## தர்ப்பை

யாகத்தின் செல்வம் 'தர்ப்பை' என யசுர் வேதம் கூறுகிறது. துர்ப்பையானது ஒரு தேவப்புல்லாகும். துர்ப்பை 'தேவகவசம்' என அதர்வணவேதம் போற்றுகிறது. துர்ப்பை இல்லாமல் எந்தக் காரியம் செய்தாலும் அது பலனளிக்காது. ஆலயக்கிரியைகளிலும் சரி, வைதிகக் கிரியைகயிலும் சரி தர்ப்பபை மிகவும் முதன்மையான பொருளாகப் பயன்படுத்தப்படுகின்றது. முந்திர சக்தியை ஏற்றுக்கொள்ளும் வலிமை தர்ப்பைக்கு உண்டு. மந்திரம், தர்ப்பை, குரு இவர்களுக்கு நிர்மால்ய தோஷம் என்றும் கிடையாது. துர்ப்பை இல்லாத காரியம் அசுரருக்குப் போய்ச்சேர்ந்துவிடும். இதனால் தர்ப்பை அணிந்து தர்ப்பாசனத்தின் மேலமர்ந்து சங்கல்பம் செய்வதே எக்காரியத்தையும் செய்யும் மரபு இந்து பண்பாட்டில் சிறப்பான இடத்தைப் பெறுகிறது.

துர்ப்பையானது தானும் புனிதமாக இருந்து தன்னை அணிபவனையும் புனிதமாக்கி கிரியைகளையும் புனிதப்படுத்திப் பூரண பலனை அளிக்கிறது. இதனால் அந்தப் புனிதமான தர்ப்பையை அணிந்தே சகல காரியங்களையும் செய்ய வேண்டுமென சாஸ்திரங்கள் வலியுறுத்துகின்றன. ஆபரக்கிரியைகளுக்கும் தர்ப்பையே மிகப் பிரதானக் கருவியாகும். குறிப்பாக சிரார்த்த காலங்களில் தர்ப்பை அணிவது அவசியமாகும். பிண்டம் போடுதல்,

எள்ளுத்தர்ப்பணம் முதலான சகல காரியங்களுக்கும் தர்ப்பை அவசியமாகவுள்ளது.

துர்ப்பை புனிதமானப் பொருள் என்பதால் தர்ப்பை அணிந்து கொண்டு ஆசமனம், பஞ்ச கௌவ்யம் அருந்துதல் முதலியன செய்யக்கூடாது என்பது விதியாகும். இதனை அமாவாசைக் காலங்களில் ‘பிதிர் தர்ப்பணம்’ செய்யும் போது அடிக்கடி ஆசமனம் பண்ணும் வேளையில் தர்ப்பையைக் கழற்றி வலது காதில் வைத்துக் கொண்டு ஆசமனம் செய்யவேண்டும் என விதித்திருப்பதைக் காணலாம். வலது காதில் கங்கை இருப்பதால் தர்ப்பையானது புனித இடத்தில் வைக்கப்படுகிறது என்பர். பிதிர்காரியங்களில் தர்ப்பையைப் பயன்படுத்திச் செய்வதினால் அக்காரியங்கள் யாவும் குறிப்பிட்ட பிதிரிடம் போய்ச்சேருவது மாத்திரமன்றி அசுரர், ராட்சதர் போன்றவர்களால் அபகரிக்கப்படாமலும் இருக்கும். ஆலயங்களில் கூறப்படும் ‘‘புண்ணியாஹவாகனம்’’ மந்திரத்தில் தர்ப்பையின் பெருமை மேல்வருமாறு கூறப்படுகின்றது. ‘‘பவித்திரமானது நூற்றுக்கனக்கான தர்ப்பைகளைப் பரப்பி ஹிரண்ய தானத்துடன் செய்வதுமான அக்கிரியைகளால் ஏற்கனவே புனிதமான இக்கிரியை மேலும் புனிதமாக்குவோம்’’.

எனவே தர்ப்பை சேர்ந்த இடமே புனிதமானதாகும். இதனால் ஒருவர் இறந்தவுடன் அவரது உடம்பு தர்ப்பையின் மேல் வைக்கப்பட வேண்டும் என சாஸ்திரங்களில் விதிக்கப்பட்டுள்ளது. துர்ப்பையுடன் கலந்த எள்ளுத் தர்ப்பணமே பிதிரர்கள் மிக விரும்புவதாகும். ஆமாவாசைக் காலத்தில் செய்யப்படும் தர்ப்பண மந்திரத்தில் தர்ப்பையின் மகிமை மேல்வருமாறு கூறப்படுகின்றது. ‘‘தர்ப்பையே! நீ ஒருபோது என்னால் சேகரிக்கப்பட்டாய். ஊன்னைப் பிதிர்களுக்காகப் பரப்புகிறோம்.

நீ அவர்களுக்குப் பஞ்சுபோல் மிக மிருதுவான ஆசனமாக இரு’’. இது போன்று ஸ்வதா என்ற சத்தமும் பிதிர்களுக்குத் திருப்தியை அளிக்கும். எனவே தர்ப்பை, எள்ளு, ஸ்வதா என்ற சத்தம் பிதிர்வழிபாட்டின் பிரதான அம்சமாகும். தேவ வழிபாட்டில் இரண்டு தர்ப்பைகளும், பிதிர் வழிபாட்டில் மூன்று தர்ப்பைகளும் பிரேத காயத்தில் ஒரு தர்ப்பையும் பவித்திரம் செய்யப்பட வேண்டும்.[1]

## தலைமாட்டில் வைக்கப்படும் விளக்கு

அபரக்கிரியையில் ஒருவர் இறந்தவுடன் தலைமாட்டில் வைக்கப்டும் விளக்கானது பல தத்துவங்களை விளக்குவதாக காணப்படுகின்றது. ஆரம்பகாலத்தில் இறந்தவரின் சடலம் விளங்க வேண்டும் என்பதற்காகவே விளக்கு பயன்படுத்தப்பட்டது. இருப்பினும் இத்தகைய விளக்கு வெறுமனே வெளிச்சத்திற்காக மட்டுமன்றி தத்துவரீதியாக வாழ்வியற் சிந்தனைகளை எடுத்தியம்புவனவாக உள்ளது. இந்து மக்களிடையே தலைமாட்டில் விளக்கு ஏற்றுவதானது எரியும் வெளிச்சம் இறந்தோரை மேலுலகத்திற்கு அழைத்து செல்லும் வழிகாட்டியாகவும், போகும் வழி வெளிச்சமாக இருப்பதற்கும், தடைகள் ஏற்படக்கூடாது என்பதற்காகவும் வைக்கப்படுகின்றது என்ற நம்பிக்கை காணப்படுகின்றது.
இந்த உடம்பில் உள்ள தோல் கூட யாருக்கும் ஆடையாகப் போவதில்லை. நிலையாமையே நிலையானது என்பதை ஒருவனது மரணப்படுக்கை காட்டுகிறது. இந்த சடலத்தை நன்றாகப் பார்த்துக் கொள்ளவே அந்த குத்துவிளக்கு ஏற்றுகின்றனர். பிறந்த விளக்கு அணைந்து கிடப்பதை செய்யப்பட்ட விளக்குகள் காட்டி நிற்கின்றன. எல்லோருடைய விளக்குகளும் அணைய வேண்டியதே. அவை எரிந்த காலத்தில எத்தனை பேருக்கு வழிகாட்டின என்பதே முக்கியம். மரணத்தில் அடங்கியுள்ள தத்துவத்தை அவை பறைசாற்றியுள்ளன. மேலும் இறைவன் ஒளிவடிவானவன், அந்த ஒளியை ஏற்றி வைக்கும்போது இறைவன் அங்கே கூட இருக்கின்றான் என்ற நம்பிக்கையாகவும் இருக்கலாம். இக்காலத்தில் கலாசார முறையில் இவ்வழக்கத்தை செய்து வருகின்றனர்.

## உரல், உலக்கை

மரணக்கிரியையிலே சுண்ணம் இடித்தல் கிரியை மேற்கொள்ளும் போது உரல் உலக்கை பயன்படுத்தப்படுவதோடு, இறந்த உடலை தகனம் அல்லது அடக்கம் செய்துவிட்டு வீட்டுக்கு வரும் போதும் உலக்கையை தாண்டிவிட்டு வீட்டினுள்

செல்லும் மரபு காணப்படுகின்றது. உரலில் பூமிதேவியையும், உலக்கையில் மேருமலையையும் பூசித்து (வையமெல்லாம் உரலாக மாமேரு வென்னும் உலக்கை நாட்டி'' – திருவாசகம்) அறுகு, மஞ்சள், பச்சையரிசி என்பவற்றை உரலில் போட்டு உயிரின் மலநீக்கத்தை முன்னிட்டு சிவபெருமானை வேண்டிச் திருப்பொற்சுண்ணம் பாடி சுண்ணம் இடிக்கப்படுகின்றது. இது இறந்தவர் செய்த பாவங்கள் எல்லாவற்றையும் இடித்து இல்லாதொளித்துச் சிவமாந்தன்மையை உண்டாக்கி நற்கதி பெறவைப்பதற்காச் செய்யப்படுவதாகும். உலக்கை வைத்தலானது கடபூதம் முதலிய தீயசக்திகள் வீட்டினுள் பிரவேசியாது தடைசெய்வதற்கு என மக்கள் நம்புகின்றனர். உலக்கை போடுதல் நிலையாமையை உணர்த்தும் தத்துவம் ஆகும். ''பூமியில் ஒருவர் இறந்த பின்பு உலக்கை, விறகு, மண்கட்டி, இவைகள் போன்றே இவரது சரீரத்தை விட்டுவிட்டு இவரது பந்துக்கள் எல்லாம் போய்விடுகிறார்கள். தருமம் மாத்திரமே தொடர்ந்தும் துணையாகின்றது'' என்பதை உணர்த்துவதாகவும் தானப்பிரசம்பை யில் கூறப்படுகின்றது.

## புறை

மரணவீட்டில் பறை அடிப்பதானது, மரணச்செய்தியை ஊருக்கு அறிவிப்பதற்காக. பேரீதாடனம் (பேரிகை – பறை, தாடனம் - அடித்தல்) என்று ஒரு கிரியையும் செய்வதுண்டு. கிரியை செய்யும் குரு இடத்தையும் பொருட்களையும் பூசித்து ''எல்லா உலகிலுமுள்ள எல்லா உயிர்களும், நல்வாழ்வு வாழவும், கொடியோர் அடங்கவும், சகல செல்வங்களும் உண்டாகுக''[2] என்ற பொருளுடைய மந்திரத்தைச் சொல்லிப் பேரிகையை அடித்துக் கிரியைகளைச் செய்வார். ஆனால் இது இப்போது வழக்கத்தில் இல்லை.

## கறிவாழை (வாழைப்பழம்)

இந்து மக்களின் கிரியைகளிலே இறைவனுக்கு படைக்கப்படும் பழங்களுள் வாழைப்பழம் பிரதானமானதாகும். அதே போலவே மலையக மக்களின் அபரக்கிரியையிலே கருமாதிக் (அந்தியேஷ்டி) கிரியையில் ஆற்றுக்கிரியையின் இறுதியில் வாழைக்காயை கீறி எறியும் வழக்கம் காணப்படுகின்றது.
எந்தப்பழமாக இருந்தாலும் சாப்பிட்டுவிட்டு அதன் விதைகளை போட்டால் முளைக்கக்கூடியனவாகும். ஆனால் வாழைக்காயையோ அல்லது வாழைப்பழத்தையோ உரித்தோ, முழுமையாக வீசினாலும் கூட அவை மீண்டும் முளைப்பதில்லை. இது பிறவியற்ற நிலையாகிய முக்தியை காட்டுகிறது. இறைவா மீண்டும் பிறவா நிலையை கொடு என்பதற்காகவே மேற்படி கிரியை மேற்கொண்டும் வாழைப்பழத்தை இறைவனுக்கும் படைக்கின்றனர். அதே போலலே தேங்காயும்.[3]

## மண்குடம்

அபரக்கிரியையிலே மண்குடமானது கொள்ளி குடம் உடைக்கும் சடங்கிற்கு பயன்படுத்தப்படுகின்றது. மலையக மக்களிள் அபரக்கிரியையில் பெண்களும் கொள்ளிக்குடம் உடைக்கும் வழக்கம் காணப்படுகின்றது. இறந்தவரைக் சுடுகாட்டிற்கு கொண்டு செல்லும் முச்சந்தியில் பெண் மக்கள் இடது தோளில் நீர் நிரம்பிய மண் கலயத்தை வைத்து மூன்று முறை சுற்றும் பொழுதும் நாவிதன் அரிவாள் நுனியால் மண்குடத்தை துளையிடுகின்றார். இறுதியாக மண்குடத்தை வல பக்கம் கீழே போட்டு உடைத்த பின்னர் திரும்பி பாராது அழைத்துச் செல்கின்றனர். இதே போன்று குழிமேட்டில் கொள்ளி வைக்கும் மகனால் கொள்ளிக்குடம் உடைக்கப்படுகின்றது. இவ்வாறு குடம் உடைத்தல் என்பதற்கு இம் மண்ணுலகில் தனக்கும் இறந்தவருக்கும் இடையேயான உறவு குடம் உடைத்தலோடு முடிந்துவிடுவதாகக் கூறுகின்றனர்.

மண்குடம் என்பது இறந்தவர்க்கும் இருப்பவர்க்கும் இடையே காணப்பட்ட உறவின் குறியீடாக எண்ணப்படுகின்றது. சுட்ட மண்சட்டியைத் திரும்ப ஒட்ட வைக்க முடியாது என்ற வாக்கியத்தோடு தொடர்புப்படுத்தப்படுகின்றது. பணிக்குடம் உடைந்து குழந்தைப் பிறந்து உறவை ஏற்படுத்துவது போலவும் நீர் நிறைந்த குடத்தை உடைப்பது இறப்புச்சடங்கில் உறவு முடிந்து விடுவதாகவும் எண்ணப்படுகின்றது. இருப்பினும் இதன்

உண்மையான தாற்பரியமானது கொள்ளிக்குடமானது மண்ணால் ஆன சிறு பானையில் வைக்கப்படுகின்றது. இக்கும்பத்தில் இறந்தவரின் உயிரைத் தங்கும்படியும், அப்படித்தங்கிய உயிரை சிவபெருமானுடைய வேண்டுதலினால் மலநீக்கம் செய்தற் பொருட்டு இக்கும்பம் உதவுகின்றது. தடுமாற்றம் அடைந்திருக்கும் உயிரை ஆறுதல்படுத்தி, இறைவன்தான் நித்தியமான பொருள், அவனிடத்திலே சேரவேண்டியது உனது கடமை, கர்மபலன்களைப் பொடியாக்கி அந்தப் பெருமானை நாட ஆயத்தமாய் கும்பத்தில் வந்து நில். உயிரைக் காடுவரை சிவமாகிய உடலோடு இட்டுச்சென்று, அங்கே மூன்று முறைகள் இக்கும்பத்தில் ஓட்டை செய்து அதில் இருந்து ஓடும் நீரினை உடலில் தெளிக்கப்படுகின்றது. இறந்தவரின் உயிரில் உள்ள மண், பொன், பெண் அல்லது ஆண் ஆசை முதலிய ஆசைகள் எல்லாம் நீக்கப்பட்டு விட்டன. தூய்மையான உயிர் சிவமாகிய உடலில் கலக்கப்படுகின்றது என்ற நம்பிக்கையில் இச்சடங்கு செய்யப்படுகின்றது என்று கொள்ளலாம்.[4]

## பிரண்டைக் கொடி

மூன்றாங் குழிக் கிரியையின் போது நாவிதனால் சவப்புதையலின் மேல் பிரண்டைச் கொடியின் துண்டுகள் தலையிலிருந்து கால்வரை தலை வயிறு, பாதம் ஆக முறையே பிரண்டைச்செடியின் தண்டுகளை மூன்று, இரண்டு, ஒன்று என வைக்கப்பட்டு அவ்வாறே மண்ணும் அதன்மேல் மூன்று, இரண்டு, ஒன்று என வைக்கப்படும். பிரண்டை வைப்பது மலபரிபாக நீக்க தத்துவத்தைக் குறிக்கின்றது. மூன்று மலத்துள்ளாரும் (சகலர்), இரண்டு மலத்துள்ளாரும் (பிரளயாகலர்), ஒரு மலத்தார் (விஞ்ஞானகலர்) ஆகிய மூவகை ஆன்மாக்களும் மலபரிபாகம், சிவத்தன்மை, இறையுடன் இரண்டறக் கலத்தல் பெற்று மீண்டும் பிறவா நிலையை பெறுவதை உணர்த்துகிறது. இம்முறையானது பிரேத அடக்கத்திற்குரிய நடைமுறையாகும். நிலத்துள் பிரேதத்தை அடக்கம் செய்தலானது பஞ்ச பூதங்களாலான உடலை பஞ்ச பூதங்களில் ஒன்றான நிலத்திடம் கையளிப்பதைக் குறிப்பதாகும். இதேப் போன்றதே தீயிடம் கையளிப்பதும், நீராகிய கங்கையில் கையளிப்பதும் பஞ்ச பூதத்தின் பாற்பட்ட கொள்கையைக் கடைப்பிடிக்கும் நடைமுறையாகும். பிரண்டங் கொழுந்தானது அதன் வளர்ச்சி பல படிமங்களாகக் காணப்படுகிறது. ஒவ்வொரு தண்டும் ஏதாவதொன்றைப்பற்றி பிடித்து உயர்வை நாடி வளர்ந்துக் கொண்டே சென்று பல படிகளைத் தாண்டி உயர்வினை எய்துகிறது. மனிதனும் பல பிறவிகளை எடுத்து அவை ஒவ்வொன்றிலும் தன் உயர்வை நாடிச்செல்கிறான். இதனை உருவகிக்கும் ஒரு நிகழ்ச்சியாகவே பிரண்டங் கொழுந்து புதைக்குழி மேட்டில் நடப்படுகின்றது.[5]

## சிவ கும்பம் வைத்தல்

படைத்தல், காத்தல், அளித்தல், அருளல், மறைத்தல் எனப்படும் ஐந்தொழில்களையும் புரியும் ஒரே இறைவன் என்று சைவர்கள் நம்புகின்றார்கள். ஆப்பெருமான் சிவமும், சக்தியுமாய் இணைந்து இருப்பதால் ஒரே கும்பத்தில் சிவமும், சக்தியும் எழுந்தருளும்படி ஒரு கும்பம் வைப்பது போதுமானது. இறந்தவரின் உடலைச் சிவமாக்கும் பொருட்டு இக்கும்பம் வைக்கப்படுகின்றது. கும்பத்தில் சிவபெருமானே எழுந்தருளும்படி வேண்டுதல் செய்து, அப்பெருமான் கும்பத்தில் எழுந்தருளி இருக்கின்றார் என்ற நம்பிக்கையோடு கிரியைகளை செய்தல் வேண்டும். முதலில் உடலை சுத்தி செய்யும் கிரியைகளை செய்தப்பின் சிவபெருமானை வேண்டிக் கும்பத்து நீரை உடலிலே தெளித்துவிடும் போது, உடல் சிவமாக்கிவிட்டது என்று கருதப்படுகின்றது.

## நேல்

இறப்புச் சடங்கிலே பல கிரியைகளுக்கு நெல் பயன்படுத்தப்படுகின்றது. மலையக பிரதேசங்களில் நிறைநாழி வைப்பதற்கு நெல்லினை பயன்படுத்துகின்றனர். அதேப் போன்றே சீதேவி வாங்கும் சடங்கின் போது பசுஞ்சாணத்தில் தோய்க்கப்படும் நவதானியங்களில் நெல்லும் பயன்படுத்தப்படுகின்றது. மூன்றாங்குழி மூடல் சடங்கின் போதும் புதைகுழி மேலாக நெல்லினை தூவும் வழக்கமும் காணப்படுகின்றது. அனைத்துப் பிரதேசங்களிலும் காணப்படும் வாய்க்கரிசி இடும் சடங்கின் போதும் பயன்படுத்தப்பட்டது. தற்காலத்தில் அரிசியைப் பயன்படுத்துகின்றனர். நெல்லானது

KALAM -International Research Journal
Faculty of Arts and Culture
South Eastern University of Sri Lanka
Volume X Issue 1, 2016

விதைபொருள். அதனை விதைத்தால் முளைவிட்டு மீண்டும் வளர்ந்து பயிராகும். அத்தன்மையான நெல்லை வறுத்துப் பொரியாக்கிவிட்டால் அந்த நெற்பொரி மீண்டும் முளைக்காது. இந்த உண்மையை பாவனையாக வைத்துதான், இறந்துபட்ட உயிர் மீண்டும் பிறவாது இருக்க வேண்டும் என்ற நம்பிக்கையில் நெற்பொரியை இடும் போது எம்மை விட்டுப்பிரிந்த இந்த உயிரானது மீண்டும் பூமியில் பிறவாதிருக்க அருள்புரிவாய் இறைவா! என்ற வேண்டுதலோடுதான் இச்சடங்கினைச் செய்தல் வேண்டும். மற்றொரு வகையில், உயிரை ஒளிபெற விடாது மறைப்பன ஆணவம், கன்மம், மாயை என்கின்ற மும்மலங்கள். நெல்லிலே மேலே மூடியிருக்கின்ற உமியை ஆணவத்திற்கும், உள்ளே அரிசியை மூடியிருக்கின்ற தவிட்டை கன்மத்திற்கும், உள்ளே அரிசியாய் இருக்கும் மாப்பொருளை மாயைக்கும் ஒப்பிடலாம்.

நெல்லை சிவனருள் என்கின்ற நெருப்பிலே வறுக்கின்றபோது விளைவை உண்டுபண்ணுகின்ற உமியும் தவிடும் அரிசியும் வெந்து தூய்மையான வெண்ணிறமான பொரியாகி மீண்டும் பிறவாமை எய்த வேண்டும் என்பதே இச்சடங்கின் உட்கருத்தெனக் கொள்ளலாம்.[7]

இவ்வகையில் மனித வாழ்வில் வளமும் நலமும் வேண்டி மக்களால் மேற்கொள்ளப்படும் இத்தகைய கிரியைக்கு பயன்படுத்தப்படுகின்ற விஷேடப்பொருட்களும் வெறுமனே கிரியை செய்வதற்காக மாத்திரமன்றி அவை அக்கிரியைகளின் சிறப்பு அடையாளமாகவும் புனிதத்தன்மை வாய்ந்தனவாகவும் தனித்த அர்த்தமுடையனவாகவும் கருதப்படுகின்றது. இறந்தவருடைய ஆன்மா சாந்தியடையவும் இழவு வீட்டாரை தீட்டு நிலையிலிருந்து நீக்கி பழைய இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பவைத்தல் உறவுகளை வலிமையடையச் செய்தல் உரிமையை நிலைநாட்டல் போன்றவற்றை வலியுறுத்தும் வகையில் பயன்படுத்தப்பட்டுள்ளன. கிரியைகளின் போது மக்கள் எவற்றையெல்லாம் எந்த வகையான கேள்விகளுக்கும் உட்படுத்தாமல் ஆற்றல் பொதிந்தது என்று ஏற்றுக் கொள்கின்றார்களோ அவை அனைத்தும் புனிதத் தன்மை பெற்றுவிடுவதைக் காணலாம். அதுமற்றுமன்றி அபரக்கிரியைகள் பரம்பரையாக மேற்கொள்ளப்பட்ட முறைகளின் அடிப்படையிலும் நம்பிக்கையின் படியும் நடத்திவருகின்றமை அவதானிக்கலாம். இவ்வகையில் நடத்தப்பட்டுவரும் அக்கிரியைகளுக்கு பயன்படுத்துகின்ற பொருட்களும் வெறுமனே கிரியைகளுக்காக மட்டுமன்றி தனித்த அர்த்தமுடையதாக கருதப்படுகின்றன என்பதை எடுத்துக்காட்டுவதோடு இவற்றினூடாக இக்கிரியைகளும் சமூக தத்துவார்த்தங்களையும் தாற்பரியங்களையும் கொண்டவகையிலேயே நடாத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

## அடிகுறிப்புகள்

1. ஆத்ம விமோசனம், (2007), பக்.23-29.
2. மேலதுஇ ப.4.
3. ரவவிள:.̇..̇.அ.கயஉ நடிழுமு.உ ழுஅ.
4. ஆத்ம விமோசனம், (2007), ப.36.
5. சபாரெத்தினம், க., (2004), ஆரையம்பதி மண், ப.248.
6. ஆத்ம விமோசனம், (2007), ப.35.
7. மேலது, ப.42.

## உசாத்துணை நூல்கள்

கார்த்திகேசு சிவதம்பி, (1993), இலங்கை மலையகத் தமிழரின் பண்பாடும் கருத்து நிலையும், தொகுதி-1, உதயா நிறுவனம், கொழும்பு.

சபாரெத்தினம்,ச.,(2014),ஆரயம்பதி மண், ஆதவன் அச்சகம், அரசடி, மட்டக்களப்பு.

சரவணன்,ச.,(2011), இந்திய சடங்குகளும் நம்பிக்கைகளும், சத்தியா பதிப்பகம், சென்னை.

சுப்பிரமணிய தேசிகர்,ந.,(2009), சண்முகநாத அச்சகம், யாழ்ப்பாணம்.

செல்லத்துரை,சு., (2010), ஆன்ம விடுதலை, புனித வாசம் பதிப்பகம், யாழ்ப்பாணம்.

தட்சணாமூர்த்தி,அ., (1994), தமிழர் நாகரிகமும் பண்பாடும், யாழ் வெளியீடு, யாழ்ப்பாணம்.

வேல்முருகு,ந., (1993), மலையக மக்களின் நம்பிக்கைகளும் சடங்குமுறைகளும், வாசகர் பதிப்பகம், யாழ்ப்பாணம்.

......(2007), ஆத்ம விமோசனம், இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம்.